**கண்டி பல்வகையிலான போக்குவரத்து நிலையத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் -2022**

------------------------------------------------------------------------------------------------------------------------

கண்டி பல்வகையிலான போக்குவரத்து நிலையத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்குமிடையே கைசாத்திடப்பட்ட 6623-LK (சலுகைக் கடன்) மற்றும் 6624-LK (சலுகையற்ற கடன்) ஞகு ஆம் இலக்க 2021 ஏப்ரல் 22 ஆந் திகதி கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 04.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நகர அபிவிருத்தி நீர் வழங்கல், மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகும். எனினும் 2021 ஆம் ஆண்டில் அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் இச்செயற்திட்டத்தின் நிறைவேற்றுப் பொறுப்பானது போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சிற்கு மாற்றப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையானது செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக மாறியுள்ளது. கண்டி பல்வகையிலான போக்குவரத்து நிலையத்தின் பொதுப் போக்குவரத்து பாவனையாளருக்கு எளிதில் அணுகுதல், செயற்திறன் மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 04 கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன. அதாவது கண்டி பல்வகையிலான போக்குவரத்து நிலையத்தை அபிவிருத்தி செய்தல், கண்டி பல்வகையிலான போக்குவரத்து நிலையத்தை (KMTT) சுற்றி நகர ஒருங்கிணைப்பு மற்றும் வீதிப் பாதுகாப்பினை மேம்படுத்துதல், நிறுவன ரீதியான வலுப்படுத்தலும் இயலளவினைக் கட்டியெழுப்புதலும், தற்செயலான அவசர பிரதிச் செயல் கூறு என்பனவாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த கிரயம் ரூபா 13,762 மில்லியனுக்குச் சமமான யு.எஸ். டொலர் 69.33 மில்லியனாக இருந்தது. இதில் யு.எஸ்.டொலர் 64.33 மில்லியனுக்குச் சமனான எஸ்.டீ.ஆர் 47.13 மில்லியன் சலுகை நிபந்தனைகளின் கீழ் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் நிதியளிக்கப்பட்டுவதுடன் சலுகையற்ற நிபந்தனைகளின் கீழ் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் ரூபா யு.எஸ் டொலர் 5 மில்லியன் நிதியளிக்கப்படும். செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2021 மே 06 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2025 மே 31 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர்31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில்நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும்பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும். இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான 3 வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவைபெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைமகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமிமை/ கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளர்களின் சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 01/2019 ஆம் இலக்க 2019 மார்ச் 15 ஆந் திகதிய முகாமைத:துவ கூற்றறிக்கையின் உப உறுப்புரை 9.3 | மீளாய்வாண்டில் ஒழுங்குபடுத்துதல் குழுக் கூட்டம் நடைபெறவில்லை. | செயற்திட்டத்தின் சிவில் வேலைகள் ஆரம்பிக்காமையின் காரணமாக செயற்திட்ட ஒழுங்குபடுத்துதல் குழுக் கூட்டம் நடைபெறவில்லை. | முகாமைத்துவ சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்கியிருத்தல் வேண்டும். |
| (ஆ) | 01/2022 ஆம் இலக்க 2022 பெப்ரவரி 07 ஆந் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் உள்ளகக் கணக்காய்வினால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒரு பொருத்தமான உத்தியோகத்தரினை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படுதல் வேண்டும். |

**(இ) கடன் உடன்படிக்கை**

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | பட்டோலை 02 இன் பிரிவு 01 இற்கு இணங்க | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படும் திகதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களுக்குள் ஒரு மேற்பார்வை ஆலோசகர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆலோசகர் மற்றும் ஒப்பந்தக்காரரின் சேவைகளுக்காக ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டதும் செயற்திட்டத்தின் செயற்பாட்டுக் கையேடு பூர்த்திசெய்யப்படும். | கடன் உடன்படிக்கையுடன் இணஙக்கி நடத்தல் வேண்டும். |
| (ii) | பட்டோலை 02 இன் பிரிவு 01 இற்கு இணங்க | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கடன் செயற்படும் திகதியிலிருந்து ஆறுமாதங்களுக்குள் ஒரு செயற்திட்ட செயற்பாட்டு கையேடு தயாரிக்கப்படவில்லை. | செயற்திட்ட செயற்பாட்டு கையேடு பூர்த்திசெய்யப்படும். | கடன் உடன்படிக்கையுடன் இணங்கி நடத்தல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிருவாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 மே 06 ஆந் திகதியிலிருந்து செயற்திட்டத்தின் கடன் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் சிவில் மற்றும் ஆலோசனை வேலைகளின் பெறுகைச் செயன்முறை தாமதித்ததன் காரணமாக செயற்திட்டத்தின் சிவில் வேலைகள் தொடங்கியிருக்கவில்லை. இதன் விளைவாக மீளாய்வாண்டின் போது செலவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட யு.எஸ். டொலர் 18.61 மில்லியனில் ரூபா 165.61 மில்லியனுக்குச் சமனான யு.எஸ் டொலர் 0.46 மில்லியனை செயற்திட்டம் செலவு செய்திருந்தது. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் செயற்திட்டம் 2022 சனவரியில் MOUDH இலிருந்து MOTH இற்கு மாற்றப்பட்டதுடன் பெறுகைத் திட்டத்திற்கு இணங்க பெறுகை வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. | சிவில் வேலைகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 36 மாதங்களுக்கு மேலாக நிர்மாண வேலைகள் தாமதித்ததன் காரணமாக 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையும் 825 நபர்களுக்கு இழப்பீட்டினை ரூபா 712 மில்லியன் செலுத்தப்பட்டதுடன் மீளாய்வாண்டில் 825 நபர்களில் 17 நபர்களுக்கு வியாபார நட்டத்திற்கான இழப்பீடாக ரூபா 8.40 மில்லியன் இன்னும் செலுத்த வேண்டியுள்ளது. மேலும் செயற்திட்டம் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்காக 17 நபர்களுக்கு இழப்பீடாக முறையே ரூபா 11.49 மில்லியன் மற்றும் ரூபா 11.69 மில்லியனை செலுத்த வேண்டியுள்ளது. தொடக்க திட்டத்துடன் நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்குமாகவிருந்தால் செயற்திட்டம் செலுத்திய ரூபா 31.59 மேலதிக இழப்பீட்டினை சேமித்திருக்கலாம் என அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டம் 2022 சனவரியில் MOUDH இலிருந்து MOTH இற்கு மாற்றப்பட்டதுடன் எங்களின் பெறுகைத் திட்டத்திற்கு இணங்க பெறுகை வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. | காணி இழப்பீடு செயன்முறையினை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 பயன்படுத்தப்படாத வளங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்திற்கு மீளாய்வாண்டிற்கான இலங்கை அரசாங்கத்தின் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 150 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது செயற்திட்டம் ரூபா 17.09 மில்லியனை மாத்திரம் பயன்படுத்தியிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. புகையிரத உத்தியோகத்தர்களுக்கு புகையிரத கட்டிடங்களை நிர்மாணிப்பதிலுள்ள தாமதம் மற்றும் காணி இழப்பீட்டிற்கு குறைவான கொடுப்பனவு என்பன இந்நிலைமைக்கு பிரதானமாக தாக்கமளித்துள்ளது. மேலும் புகையிரத திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது வீட்டு வாடகையாக ரூபா 0.96 மில்லியன் செலுத்தப்பட்டது. | புகையிரத கட்டிடத்திற்கான கிரய மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கான ஆலோசனை ஒப்பந்தத்தினை வழங்குவதற்காக உரிய பெறுகைக் குழுவிடமிருந்து தேவையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு காலம் எடுத்ததன் காரணமாக தாமதம் ஏற்பட்டிருந்தது. | அரசாங்க நிதியை செயற்திறனாகப் பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட பண அதிகரிப்பு பட்டோலைக்கு இணங்க மீளாய்வாண்டில் இறுதியளவில் யு.எஸ் டொலர் 13.5 மில்லியனை செலவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும் மீளாய்வாண்டின் போது யு.எஸ் டொலர் 460,000 மாத்திரம் பண அளிப்புச் செய்யப்பட்டிருந்தது. அதில் யு.எஸ் டொலர் 406,640 மீளாய்வாண்டின் இறுதியில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகவே எதிர்பார்க்கப்பட்ட சிவில் மற்றும் ஆலோசனை வேலைகள் மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன் கடப்பாட்டு கட்டணங்கள், சேவைக் கட்டணங்கள், ஆலோசனைக் கொடுப்பனவு என்பவற்றிற்கான கொடுப்பனவு செய்யப்படாமையானது கடன் நிதிகள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டமைக்கு தாக்கமளித்திருந்தது. | மத்திய மாகாணத்தின் போக்குவரத்துத்துச் சேவை அதிகார சபைக்காக KMTT இனை நிர்மாணிக்கும் போது இடம்மாறுதல் போக்குவரத்து செயற்திட்டத்திற்கான ஆலோசனை சேவை ஒப்பந்தத்தினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. அதற்கிணங்க அங்கீகாரத்திற்காக அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் தீர்மானம் எடுத்தல் தாமதமாகியிருந்தது. | கடன் நிதி செயற்திறனாகப் பயன்படுத்துதல் வேண்டும். |